பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**06 07 2026** **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசு முறைப்பயணமாக இந்தோனேஷியா சென்ற பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

2. ஓணம் பண்டிகையை முன்னிட்டு, **100** சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார்.

3. வடகிழக்கு மாநிலங்களின் பொருளாதாரம் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

4. ஏழைகளுக்கு இலவச உணவு தானியம் வழங்கும் திட்டத்தை தற்போதைய நடைமுறைகளின்படியே மத்திய அரசு தொடர வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

5. **Dutch** ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Amarya Bajaj** பட்டம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள்

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு முறைப்பயணமாக இந்தோனேஷியா சென்றடைந்தார்.

ஜகார்தா விமான நிலையத்தில் இந்தோனேஷிய அதிபர் திரு **Prabowo Subianto** அவரை வரவேற்றார்.

அந்நாட்டு அதிபருடன் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்த பேச்சுவார்த்தையில் இடம்பெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தோனேஷியா பயணத்தை முடித்துக்கொண்டு நாளை மறுநாள் ஆஸ்திரேலியா செல்லும் பிரதமர், பின்னர் வெள்ளிக்கிழமை நியூசிலாந்தும் செல்கிறார்.

<<<<<>>>>>

ஓணம் பண்டிகையை முன்னிட்டு, **100** சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கேரளம் மாநில பிஜேபி-யின் கோரிக்கையை ஏற்று, இந்த சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக தெரிவித்தார்.

கேரளத்தில் ரயில் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்ற பிரதமரின் எண்ணத்திற்கு வலுசேர்க்கும் வகையிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் கூறினார்.

பூரி ஜெகன்நாதர் ரத யாத்திரையையொட்டி, 300 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதில் யோகா முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக யோகா உலக அளவில் வரவேற்பை பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உடல் நலனையும், மன நலனையும் சீராக பராமரிக்க யோகா உதவிடும் என்றும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

வடகிழக்கு மாநிலங்களின் பொருளாதாரம் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், **2014**-ஆம் ஆண்டு **3** லட்சம் கோடி ரூபாய் அளவில் இருந்த வடகிழக்கு மாநிலங்களின் பொருளாதாரம், தற்போது **10** லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்திற்கு டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் சிந்தனைகள் வழிகாட்டியாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

ஷியாமா பிரசாத் முகர்ஜியின் **125**-ஆவது பிறந்த நாளையொட்டி, சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஷியாமா பிரசாத் முகர்ஜியின் தேசப்பற்று தியாகம் மற்றும் தொலைநோக்கு பார்வையை என்றும் போற்றுவோம் என்றும் டாக்டர் எல். முருகன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க சர்வதேச ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று மத்திய போதைப்பொருள் தடுப்பு முகமையின் தலைமை இயக்குநர் திரு **Anurag Garg** கூறியுள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளின் போதைப்பொருள் தடுப்பு முகமைகளின் இரண்டு நாள் கூட்டத்தை இன்று குவஹாத்தியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

போதைப்பொருள் தடுப்பு குறித்து விவாதிப்பதற்கென காணொலி பணிக்குழு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் இந்தியா உறுதியுடன் உள்ளதாகவும் திரு **Anurag Garg** கூறினார்.

<<<<<>>>>>

கர்நாடகாவில் கல்குவாரியில் நேரிட்ட விபத்தில் ஏழு பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, தேசிய மனித உரிமைகள் ஆணையம் அம்மாநில அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதுதொடர்பாக, தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்ட தேசிய மனித உரிமைகள் ஆணையம், இந்த விபத்து குறித்து இரண்டு

வார காலத்திற்குள் விரிவான அறிக்கையை தாக்கல் செய்யுமாறு கர்நாடக அரசு தலைமை செயலருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

<<<<<>>>>>

ஏழைகளுக்கு இலவச உணவு தானியம் வழங்கும் திட்டத்தை தற்போதைய நடைமுறைகளின்படியே தொடர வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு விஜய், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ், தற்போது 35 கிலோ உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் உணவு தானியம் வழங்கப்படும் என்று புதிதாக முன்மொழியப்பட்டுள்ள சட்டத் திருத்தத்தினை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் அவர் அக்கடிதத்தில் கோரியுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல் தற்போதைய நடைமுறைகளின்படியே திட்டத்தை தொடர வேண்டும் என்றும் திரு விஜய் அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் நாளை மறுநாள் வரை அதி கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாகவும், இதனை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறையில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நாசிக்-கில் நாளை அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனை கருத்தில்கொண்டு பொதுமக்கள் தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நிலைமையை மாநில அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறினார்.

இதற்கிடையே, மகாராஷ்ட்ராவில் பெய்துவரும் கனமழை காரணமாக, மும்பையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

**Konkan** மண்டலத்தில் நிலச்சரிவுகள் ஏற்பட்டதன் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

கோவாவில் அடுத்த ஆறு மாதங்களுக்குள் **100** செவிலியர் பணியிடங்கள் உருவாக்கப்பட உள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு **Vishwajit Rane** கூறியுள்ளார்.

பனாஜியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

அஸ்ஸாமில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தேயிலை தொழிலாளர்களுக்கு நில உரிமைக்கான பட்டா வழங்கப்படும் என்று அம்மாநில அமைச்சர் திரு **Rameshwar Teli** கூறியுள்ளார்.

இன்று அம்மாநில சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், இதன்மூலம் **250** தேயிலை தோட்டங்களின் தொழிலாளர்கள் பயனடைவார்கள் என்றார்.

ஏற்கனவே, **106** தேயிலை தோட்டங்களில் பணியாற்றும் **28** ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு **Rameshwar Teli** தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் இரண்டு தீவிரவாதிகளை தேடும் பணியில் பாதுகாப்புப்படையினர் மூன்றாவது நாளாக இன்றும் ஈடுபட்டு வருகின்றனர்.

சோஃபியான் மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் தொடங்கி, பாதுகாப்புப் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

இலங்கை சிறையில் நேரிட்ட வன்முறை சம்பவங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 25-ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பில் உள்ள சிறையில் இருதரப்பினருக்கு இடையே இந்த மோதல் ஏற்பட்டதாகவும், இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Dutch** ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Amarya Bajaj** பட்டம் வென்றார்.

**Amsterdam**-ல் நடைபெற்ற இப்போட்டியின் **13** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், இங்கிலாந்தின் **Daniel Stevenson**-ஐ வென்றார்.

--------------

குரேஷியாவில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் முடிவில் அவர், **21** புள்ளிகள் பெற்று இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------------

**Sub Junior** ஹாக்கி தேசிய முகாமில் பங்கேற்பதற்காக **15** பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இடம்பெற்றுள்ளவர்கள் சண்டிகரில் வரும் **7**-ஆம் தேதி தொடங்கி, **18**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள முகாமில் பங்கேற்கின்றனர்.

------------

**21** வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய மகளிர் அணிக்கும் - ஸ்காட்லாந்து மகளிர் அணிக்கும் இடையேயான இரண்டாவது ஹாக்கிப் போட்டி **Edinburgh**—ல் இன்று நடைபெறுகிறது.

----------------------

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சந்திரிகா புஜாரி மற்றும் ஜாய்ஸ்ரீ தேவி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **51** கிலோ எடைப்பிரிவு முதல் சுற்றில் சந்திரிகா புஜாரி, **5-0** என்ற புள்ளிக் கணக்கில் மங்கோலியாவின் **Lakham Tsendbaatar**-ஐ வென்றார்.

**54** கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் ஜாய்ஸ்ரீ தேவி, சீன தைபே-யின் **Chen Ning Hong**-ஐ வென்றார்.

**<<<<<END>>>>>**